# ஆசிரை

**அன்பின் வாசக நெஞ்சங்களே!**

மே மாதம் ஒவ்வொரு நாளும் கூடியிருந்து செபமாலை சொல்லுவதும், மேமாதம் என்னும் போது எமக்கெல்லாம் நினைவிற்கு வருவது வணக்கமாதம். மாதாவின் மாதம் என்னும் பொழுது ஒவ்வொரு நாளும் கூடியிருந்து செமாலை சொல்வதும், குடும்பம் குடும்பமாக செபமாலை சொல்லுவதும் மிக முக்கியமாக கருதப்படுகிறது. செபமாலை தோற்றம் பெற்றது எவ்வாறு என்பது பலருக்கு தெரிந்திருக்கலாம். ஆனால் அதனுடைய சக்தியும், ஆற்றலும் மிகமுக்கியமானதாகவும், சிறப்பானதாகவும் கருதப்படுகிறது. இன்னும் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் அதனுடைய பயன்பாடும், பாவனையும் அதிகரித்துக் கொண்டு செல்கிறது என்றால் அதற்குமிகவும் முக்கியமான காரணம் அதன் சக்தியும், வல்லமையும் நாம் உணரவேண்டும்.

**செபமாலையின் வரலாறு**

1571ம் ஆண்டு இஸ்லாமியருக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையில் ஏற்பட்டயுத்தம் செபமாலை ஓதுதலின் மூலம் கிறிஸ்தவர்கள் வெற்றி பெற்றார்கள் என்பது வரலாற்று உண்மை. உரோமாபுரியில் எல்லா கிறிஸ்தவர்களும் கையில் செபமாலை ஏந்தி இந்தபோர் முடிவடையவேண்டு மென்று செபித்தபடியால் அதற்கு நல்லபலன் கிடைத்தது. இதற்குப் பின்னர் செபமாலைப் பக்தி மக்களிடையே அதிக ஆர்வம் பெற்று பக்திமுயற்சி பரவிவந்தது. இந்த செபமாலை பக்திமுயற்சி 13ம் நூற்றாண்டில் ஆரம்பமானது. அக்காலத்தில் இயேசுவின் இறைத் தன்மைக்கெதிராக பல மக்கள் தங்களுடைய விசுவாசத்தை விட்டு சென்றார்கள். அப்போதுதான் டோமினிக் என்ற புனிதர் போராடி விசுவாசத்தை கட்டிஎழுப்ப முயற்சிசெய்தார். ஆனால் அவரால் முடியாமற் போகவே அப் புனிதர் வனாந்தரத்திற்கு தவம் செய்ய சென்று தவம் செய்து கொண்டிருக்கும் பொழுது மரியாள் அவருக்கு காட்சியில் தோன்றி செபமாலை ஓதும்படி கேட்டுக் கொண்டார். அவர் செபமாலை ஓதிசெபித்தபோது இயேசுவின் இறைத் தன்மைக்குஎதிராக செய்யப்பட்ட அனைவரும் மீண்டும் மனமாறி திருச்சபையில் சேர்ந்து கொண்டார்கள். இந் தநிகழ்விற்குபிறகுசெபமாலைப் பக்திமிகவும் அதிகமாக மக்கள் மத்தியில் பரவியது.

**செபமாலையின் பயன்பாடு**

1. புனிதலூயிஸ் மொன்பெட் என்னும் புனிதர் செபமாலையைபற்றிசிறப்பாகவும் அதன் பயன்பாட்டைப் பற்றியும் கூறியிருக்கிறார். நாம் செபமாலைசொல்லும் பொழுது எம்மிலிருந்து தீமை அகன்றுபோகும். இறைவனின் அருள் எம்மில் சுரக்கும்.

2. 12ம் பத்திநாதர் பாப்பரசர் கூறும்பொழுது, செபமாலை ஓதும் போது இயேசுவின் மீட்பின் வரலாற்றைநாம் தியானிக்கிறோம். அவரோடுநாம் இணைகின்றோம். ஆண்டவரின் செபத்தைசொல்லும் பொழுதுநாம் பாவத்திலிருந்து, சாத்தானின் கட்டுக்களிலிருந்து அசுத்த ஆவியின் பிடிகளிலிருந்து விடுதலை பெறுகின்றோம். செபமாலை வெற்றியடைய செய்யும். ஒவ்வொரு முயற்சியும் வெற்றியைத்தான் அளிக்கும் என்பது உண்மை என்று குறிப்பிடுகிறார்.

3. **செபமாலைபுதுமை**
   அவுஸ்திரேலியாவில் 1938ம் ஆண்டுபற்றிக் போயிட்டன் என்பவாட் காசநோயினால் அதாவது நுரையீரல் முழுவதும் பாதிக்கப்பட்டிருந்தது. இவரும் இவருடைய சகோதரிகளும் செபமாலை ஓதிசெபித்தார்கள். அந்த நோய் அதற்குப் பிறது முற்றிலும் நீங்கிவிட்டது. இப்படியாக பலபுதுமைகளையும், அற்புதங்களையும் செபமாலை சொல்லுவதினூடாக அடைந்து கொள்ள முடியும் என்பதையும் அறிக் கூடியதாகஉள்ளது.

4. அலன் றோஜ் என்னும் புனிதர் மிகவும் செபமாலைப் பக்தி உள்ளவராக இருந்தார். அவர் பின்வரும் பலாபலன்களை கூறுவதை அறியக்கூடியதாக உள்ளது.

   1. செபமாலை ஓதும் போது எல்லோரும் கிறிஸ்துவின் மக்கள் எனப்படுவர்.
   2. இந்த செபமாலைத் தியானம் செய்யும் பொழுது விண்ணப்பங்களாக மரியன்னையின் பரிந்துரையால் மன்றாடுபவை கட்டாயம் கிடைக்கும் என்பது உறுதி.
   3. அதிகமாக உத்தரிக்கும் ஆன்மாக்களின் வேதனையிலிருந்து மீட்கப்படுவர்.
   4. உலகப் பற்றற்வர்களாகவும், வாழத் தூண்டுகிறது.
   5. கிறிஸ்துவின் பிறப்பு, பணிவாழ்வு, பாடுகள், மரணம் போன்றவையை ஒவ்வொருநாள ் மறையுண்மையாய் தியானிக்கும் போது தூயவாழ்விற்து எம்மைஅழைத்துச் செல்லுகின்றது.
   6. நரகத்தின் வாசலை அணுகாதவர்கள் பாதுகாக்கப் படுவோம்.
   7. சிறப்பான பாதுகாப்பு நிறைவாகக் கிடைக்கும், விண்ணகத்தின் வாசல்கள் எமக்கு வாக்களிக்கப்படும் என்பது உறுதி.

   இப்படியாக செபமாலை ஓதும் போது கிடைக்கும் பலாபலன்களாகும்

ஆகவே இம்மாதம் சிறப்பாக செபமாலை சொல்லி செபிக்கும் பொழுதுநாம் மீட்பின் மக்களாவோம். செபமாலையின் வீரர்களாவோம். “நாள்தோறும் செபமாலை சொல்லுவோம், தீமையை துரத்தி வெல்லுவோம். பாவநோயிலிருந்து விடுபட செபிப்போம். மோட்சம் செல்லுவதற்கு இலகுவான வழிஎன்பதை உணர்வோம்.

நன்றி

அன்புடன்,
அருட்பணி யூட் நிக்ஸன்
*Parish Priest*
*Our Lady of Deliverance Tamil Catholic Mission*
*Montreal (QC), Canada.*